21.04.2026

OS No: 174/2021

வா.சா. 1 திருமதி. ஆராக்கிய மேரி க/பெ தனிஸ்லாஸ்

**1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவர் தாக்கல் செய்த வழக்கின் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 456/4 சொத்தானது எங்களது அனுபவத்தில் உள்ளது என்பதனை காட்டுவதற்குரிய எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சின்ன மாமனார் குழந்தை சாமிக்கு தாவா சொத்தினை மிக்கேல் என்பவர் எழுதி கொடுத்ததாக சொல்வதில் மிக்கேலுக்கு மேற்படி சொத்தானது எப்படி பாத்தியம் என சொல்லவில்லை என்றால் மிக்கேலுக்கு எப்படி பாத்தியம் என்பது எனக்கு தெரியாது. நாளது தேதி வரை தாவா சொத்தான சர்வே எண் 456/4 க்கு 1 ஆம் பிரதிவாதி பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் இடைப்பட்ட காலத்தில் பெயர் மாற்றி கொண்டார்கள். எப்போது பெயர் மாற்றினார்கள் எந்த தாசில்தார் அதற்கான உத்தரவு பிறப்பித்தார் என்றால் தாசில்தார் யார் என்று எனக்கு தெரியாது கடந்த 4 ஆண்டுகளுக்குள் தான் பெயர் மாற்றினார்கள். 4 ஆண்டுகளுக்கு முன்னர் வாதி பெயரிலோ அவருடைய முன்னோர் பெயரிலோ தாவா சொத்திற்கு வருவாய் துறை ஆவணம் இருந்து அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் வரி ரசீது உள்ளதா என்றால் உள்ளது. வரி ரசீதினை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 50 வருட காலமாக தாவா சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் ஏன் செய்யவில்லை என்றால் தாவா சொத்தானது எங்களது சின்ன மாமனார் சொத்து என்பதால் பிறகு பட்டா பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம் என இருந்து விட்டோம். எந்த வருடத்தில் தாவா சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்திட மனு கொடுத்தோம் என்றால் கடந்த 4 ஆண்டுகளுக்குள் கொடுத்தோம். மேற்படி பட்டா மாறுதலுக்கான மனுவினை யார் தாக்கல் செய்தார்கள் என எனக்கு தெரியாது. எனது சின்ன மாமனார் எப்போது இறந்தார் என்றால் அவர் இறந்து 2 வருடங்கள் ஆகிறது. எனது சின்ன மாமனார் தாவா சொத்தினை எப்போது எனது

கணவர் பெயருக்கு உயில் எழுதி கொடுத்தார் என்றால் தெரியாது. பட்டா மாறுதல் கோரி எனது சின்னமாமனார் தாக்கல் செய்த மனுவானது உரிய வருவாய் ஆவணங்கள் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான UDR பதிவு SLR பதிவு யார் பெயரில் உள்ளது என எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான UDR பதிவு SLR பதிவு 1 ஆம் பிரதிவாதி பெயரிலும் அவரது முன்னோர் பெயரிலும் இருந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது சின்னமாமனாருக்கு மிக்கேல் எழுதி கொடுத்த பத்திரம் செல்லாது என நடவடிக்கை எடுக்க கோரி பதிவு துறை அலுவலகத்தில் 10.03.2021 ஆம் வருடம் 1 ஆம் பிரதிவாதி மனு கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவின் அடிப்படையில் 07.02.2022 ஆம் தேதி பதிவாளர் அவர்கள் எனது சின்ன மாமனாருக்கு மிக்கேல் எழுதி கொடுத்த பத்திரத்தின் அடிப்படையில் எந்த ஒரு பதிவு மேற்கொள்ள கூடாது என உத்தரவு பிறப்பித்த விபரம் எனக்கு தெரியுமாஎன்றால் தெரியும் அதற்காக தான் வழக்கு போட்டுள்ளோம். மேற்படி 07.02.2022 ஆம் தேதிய உத்தரவிற்கு பிறகு எனது சின்ன மாமனார் எனது கணவருக்கு தாவா சொத்தினை பொருத்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 1974 ஆம் வருட ஆவண எண் 1908 ல் 2 சாட்சிகள் மட்டும் கையெழுத்து செய்துள்ளதாக மாவட்ட பதிவாளர் 07.02.2022 ஆம் தேதிய உத்தரவில் தெரிவித்துள்ளதாக சொன்னால் அது எனக்கு தெரியாது. வாசா ஆ 1 ல் 2 சாட்சிகளை தவிர கூடுதலாக 3 ஆம் சாட்சியாக 1 ஆம் பிரதிவாதியின் தந்தை கையெழுத்து செய்துள்ளதாக வாசா ஆ 1 ஐ போர்ஜரியாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியாது. நான் எத்தனை ஆவணங்கள் தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அவை என்னென்ன ஆவணங்கள் என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது எனது கணவரை தான் கேட்க வேண்டும். 1 ஆம் பிரதிவாதியின் தந்தைக்கும் மிக்கேலுக்கும் எவ்வித உறவும் கிடையாது என்றால் சரியல்ல இருவரும் பங்காளி உறவினர்கள் ஆவார்கள். 1 ஆம் பிரதிவாதி தந்தையிடம் மிக்கேல் பண்ணைக்கு வேலையில் இருந்தார் என்றால் விவசாயம் பார்த்தார்

யாரிடம் விவசாயம் பார்த்தார் என்பது பற்றி தெரியாது. மிக்கேலை மூளை சலவை செய்து மிக்கேலுக்கு உரிமை இல்லாது தாவா சொத்தினை எனது சின்னமாமனார் எழுதி வாங்கி கொண்டார் என்றால் சரியல்ல. அருளானந்து வெளியூரில் ஆசிரியராக பணியாற்றியதால் அதனை சாதகமாக கொண்டு தாவா சொத்தில் நாங்கள் அனுபவம் செய்து வருவதாக பொய்யாக கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கு பரிகாரம் எங்களுக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.21 17:38:41 +0530